முரசொலி

ஆசிரியர் மு. கருணாநிதி

வார இதழ்

முரசு 3 || 4—1—57 வெள்ளி | ஒலி 40



காட்சி-16

காங்கிரஸ் மாநாடு.

[ஜே கோஷத்துடன் காங்கிரஸ் மாநாடு ஆரம்பமாகிறது. ஆனை மூஞ்சிப் பிள்ளையும், சமயோஜிதம் பிள்ளையும் மாநாட்டுக்கு வந்திருக்கிறார்கள். பலவேஷம், அவர்களுக்கு மாலை போட்டு வரவேற்றுக் கரகோஷம் செய்கிறார். மக்கள் அதைப் பற்றிக் கவலைப் படாமலே உட்கார்ந்திருக்கிறார்கள்....]

பலவேஷம்: மகாஜனங்களே! இப்போது நம்முடைய ஐந்தாண்டுத் திட்டப் பிரசார மாநாடு நடைபெறப் போகிறது. அதன் வரவேற்புக் குழு அக்ராசனாதிபதி என்ற முறையிலே நான், உங்கள் அனைவரையும் வரவேற்கிறேன். நம்முடைய காங்கிரஸ் மாநாடு என்றாலே ஜனங்கள் அதிகமாக வருவதில்லை. இன்றைக்குக் கொஞ்சம் பரவாயில்லை. காரணம்; குறவன் – குறத்தி நடனமாகக்கூட இருக்கலாம்!.. ஜனங்கள் அதிகமாகக் கூடவில்லை என்பதற்காக காங்கிரசுக்கு பலமில்லை, மதிப்பில்லை என்று கூறிவிட முடியுமா?...ஜனங்கள் காங்கிரசைப் பற்றிய சேதிகளை, கொள்கைகளை எல்லாம் தேசியப் பத்திரிகைகளில் படித்துத் தெரிந்து கொள்கிறார்கள். அதனால்தான் பேச்சுக் கேட்க வருவதில்லை. நாட்டில் படிக்கத் தெரிந்தவர்கள் நூற்றுக்குப் பதினைந்து பேர்தானே — மிச்சமிருக்கிற படிக்காதவர்கள் வரக் கூடாதோ என்று வினவலாம். படிக்காதவர்கள், படித்தவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்கிறார்கள். அதனால்தான் நம்முடைய மாநாடுகளை டிக்கட் இல்லாமல் போட்டால்கூட மக்கள் அதிகமாக வருவதில்லை. நிற்க, நானே அதிக நேரம் பேசி "போர்" அடிக்க விரும்பவில்லை! மகாநாட்டு நடவடிக்கைகளை கவனிக்க வேண்டியிருப்பதால், முதலில், மகாநாட்டுத் திறப்பு விழா நிகழ்ச்சியை ஆரம்பிப்போம். மகாநாட்டின் திறப்பாளர் யார் என்று உங்களுக்குத் தெரியும். ஸ்ரீமான் சமயோஜிதம் பிள்ளை அவர்கள்!... அவர்கள் எவ்வளவு பெரிய மனிதர்-எவ்வளவு தியாக உள்ளம் படைத்தவர்—எவ்வளவு நாளாகக் காங்கிரசிலே இருந்து உழைப்பவர் என்பதெல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும்....அப்படிப்பட்ட சமயோஜிதம் பிள்ளை அவர்கள் இந்த மகாநாட்டைத் திறந்து வைப்பார்கள்!...

(சமயோஜிதம் பிள்ளை எழுகிறார். ஆனைமூஞ்சியும், பலவேஷமும் கை தட்டுகிறார்கள்)

சம: மகாஜனங்களே!...சகோதர சகோதரிகளே!...ஐந்தாண்டுத் திட்டப் பிரசார மகாநாட்டைத் திறந்து வைக்கும் பாக்யம் பெற்றதற்கு சந்தோஷமடைகிறேன்!...

ஐந்து என்பது இந்தியாவுக்கே ஒரு தனியான நம்பர்!...ஏன்; மனிதனுக்கே ஒரு தனியான நம்பர்!...

பஞ்சபூதம்...ஐந்து!...
ஐம்புலன்...ஐந்து!...
பஞ்சபாண்டவர்.. ஐந்து!..
நேருவின் பஞ்சசீலம்......
ஐந்து!...;...

பழைய காலத்தில் பரமசிவனுக்குத் தலை கூட ஐந்து! அவர் மகன் பிள்ளையாருடைய பெயர் ஐங்கரன்!...எல்லாவற்றையும் விட விசேஷம்......மனிதனுடைய கை கால்களிலே விரல்கள் ஐந்து!...அதனால் நமது நாட்டுக்குப் போடப்பட்ட திட்டமும் ஐந்தாண்டுத் திட்டம்!......... இந்த ஐந்தாண்டுத் திட்டத்தை காங்கிரஸ் சர்க்கார்தான் கொண்டு வந்திருக்கிறது!...அதனால் காங்கிரசுக்கு வருகிற தேர்தலில் ஓட்டுப் போட்டு என்னை ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்... (உட்காருகிறார்)

பல: அடடா.........மகாநாட்டைத் திறந்து வைக்க மறந்துட்டீங்களே!

சம; ஓ மன்னிக்கவும்...இந்த மகாநாட்டையும் திறந்து வைக்கிறேன்.

பல; அடுத்தபடியாக ......இப்போது மகாநாடு திறந்து வைக்கப்பட்டது ... அடுத்தது தலைமை உரை!... இந்த மாநாட்டுத் தலைவர் இருக்கிறாரே...ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீமான் ஆனை மூஞ்சிப் பிள்ளை அவர்கள்–அவர்களை உங்களுக்கெல்லாம் அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமே இல்லை!... அவர் மிகப்பெரிய மனிதர். அதிகமாகப் பழகத்தெரியாவிட்டாலும் அனுபவக் களஞ்சியம்! இதுபோன்ற கூட்டங்களில் எழுதித்தான் படிப்பார்!............ ஏனென்றால் உலகத்துப் பெரிய தலைவர்கள் எல்லாம் ரொம்ப நிதானமாகப் பேச வேண்டும். தவறி ஒரு வார்த்தை வந்து விட்டாலும் அது உலகில் பெரிய பரபரப்பை ஏற்படுத்திவிடும். அதனால் தான் நமது ஆனை மூஞ்சிப் பிள்ளை அதிகமாகவும் பேசுவதில்லை. பேசுவதாயிருந்தாலும் எழுதிப் படித்து விடுவது! அப்படிப் பட்ட ஒப்பற்ற அறிவாளி, வருகிற தேர்தலில் எம். பி.யாகப் போட்டி போடப் போகிறார்! அவர் இந்த மகாநாட்டுக்குத் தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் வந்தே மாதரம்!

ஆனை: சபையோர்களே!...... (பிறகு படிக்கிறார்) சபையோர்களே!...ஐந்தாண்டு திட்ட பிரச்சார மகாநாட்டை இந்த ஊர் காங்கிரஸ் தியாகியும், எனது வருங்கால சம்பந்தியுமான ஸ்ரீ சமயோஜிதம் பிள்ளை அவர்கள் திறந்து வைத்தார், என்னைத் தலைமை வகிக்கக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்!

ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு நன்மையென்று கூற முடியாது! அந்தத் திட்டத்தால் தென்னாட்டில் யாதொரு நன்மையும் ஏற்படவில்லையென்று சிலர் கூச்சல் போடுகிறார்கள். தென்னாடு வடநாடு என்று பேசுவதே முட்டாள்தனம்! வடநாடு என்பது உடம்பு போன்றது! அந்தத் தலையிலே இருக்கிற கண்ணும், காதும், மூக்கும், வாயும், மூளையும்தான் பத்திரமாக இருக்க வேண்டும். கண்ணுக்கு மாத்திரம் கண்ணாடி போட்டிருக்கிறார்களே; எனக்குக் கண்ணாடி இல்லையே என்று கால் அழலாமா? தலைக்கு மாத்திரம் குல்லாயா?

* தொடர்ச்சி 4-ம் பக்கம்

சேலத்தில் பொதுக் குழு



சம்பர் 29-ம் தேதி
த்தில் செயற்குழு
இடம்.

30-ம் தேதி அம்மாபேட்டையில் கழகத்திற்காகக் கட்டப்பட்ட எழில் மாளிகையை அண்ணு திறந்து வைக்கிருர்.

செயற் குழு நடந்து கொண்டிருக்கிறது.



பொதுக்குழுவில் மாநில மாநாட்டு வரவு செலவுக் கணக்கு பரிசீலிக்கப் படுகிறது.

பொதுக்குழு நடந்த அன்னதானப் பட்டியில் பிற்பகல் விருந்து.



மாலையில் நடந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் அலங்கார மேடை!



மேடையில் தலைவர்கள்.

கூட்டத்தில் பெண்கள் பகுதி!

—புகைப்படம்—"வெள்ளிவிதி" சாமுவேல்.



சென்னை 4-1-57 வெள்ளி

இந்தியாவும் இந்தோனேஷியாவும்!

பண்டித நேருவுக்கு மிகநெருங்கிய நண்பரை முதல்வராகக்கொண்டிருக்கும் இந்தோனேஷியாவிலே சென்ற சில தினங்களாகக் கிளர்ச்சி நடைபெற்று வருகிறது.

அதிகாரங்கள் அனைத்தையும் தன்னிடத்திலே குவித்துக்கொண்டு; மாநில அரசுகளைக் கைப்பொம்மைகளாக வைத்திருந்த மத்திய அரசு — என்னும் சர்வாதிகாரச் சின்னத்தை எதிர்த்து அங்கே போர் முரசு தட்டப்படுவது நம் காதுகளில் விழுகிறது.

மத்திய வடக்கு சுமத்திரா மாநிலங்களில் எழுந்த இந்த இராணுவப் புரட்சி, இப்போது தெற்கு சுமத்ரா மாநிலத்திலும் பரவி; அந்தப் பகுதியையும் இராணுவம் கைப்பற்றிக் கொண்டிருக்கிறதாம்!

— இப்படி யெல்லாம், மேலும் மேலும் செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன.

இதன் காரணங்கள்தான் என்ன? ஆட்சி பீடத்தை எதிர்த்துப் புது அரசு படைக்கப் புறப்பட்டிருக்கும் இராணுவப் புரட்சியின் ஒரு தலைவராக விளங்கும் கர்னல் சிம்போலின் ஆட்சி பீடத்திலுள்ளவர்களின் சுயநலப் போக்கையும்; பொறுப்பற்ற தன்மையையும் சுட்டிக்காட்டி; அந்தக் கொடியவர்களிடமிருந்து இந்தோனேஷியாவைக் காப்பாற்றவே புரட்சி தோன்றி யிருப்பதாகக் கூறியிருக்கிறார்.

இந்தியாவிற்கு அண்டை நாடு; இந்தியாவின் பிரதமராம் பண்டிதரின் நண்பர் குழாத்தில் ஒருவர் அந்த நாட்டின் பிரதமர்!

எனவே அங்கு தோன்றியுள்ள புரட்சிக்கான காரணங்களும்; சூழ்நிலைகளும் இந்த நாட்டில் உள்ளதைப் போலவே இருப்பதை யாரும் மறந்துவிட முடியாது.

இந்தோனேஷியப் பிரதமர் ஜோஜோவும்; அதன் குடியரசுத் தலைவர் சுகர்னோவும் பண்டிதரைப்போலவே வெளிநாட்டுக்குக் காட்டிக் கொள்வதற்காகத் தங்கள் 'பவிஷை' மெருகிட்டுக் கொள்வதில் கிஞ்சிற்றும் தவறியது கிடையாது.

அங்குள்ள 'அரசு கட்டிலேறிகள்' பொறுப்பற்ற தன்மைக்கு பூஷணமாக விளங்குபவர்கள் இங்குள்ளவர்களைப்போல!

ஊழல் அங்கே அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் வியாபித்திருக்கிறது. ஆமாம்; இங்கும் இப்படித்தானே!

லஞ்சம்—அதற்குப் பஞ்சமேயில்லை இந்தோனேஷியாவில்; இந்தியாவில் உள்ளதைப்போல!

அமைச்சர்கள்கூட லஞ்சம் பெறுவதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள், அந்த நாட்டில்!

அட்டர்னி ஜெனரல் சுட்டிக் காட்டியபடி வெளிநாட்டு அமைச்சரான அப்துல் கனி என்பவர்மீதுகூட ஒரு லஞ்ச வழக்கு இருக்கிறதாம்

இது சம்பந்தமாய் சென்ற ஆகஸ்ட் திங்கள் அவரைக் கைது செய்வதாகக்கூட இருந்தார்கள்.

ஆனால் பிரதம மந்திரி ஜோ ஜோ தன்னுடைய சொந்த செல்வாக்கினை உபயோகித்து; அந்த வெளிநாட்டு அமைச்சர் கைது செய்யப்படுவதைத் தடுத்தார்!

இதற்கு இங்கே உவமை இல்லாமலில்லை; பத்துலட்சங்கள் பெற்ற அமைச்சர்களுக்கா பஞ்சம், இங்கே?

அதுமட்டுமல்ல! நெருங்கிய ஒற்றுமை இன்னொன்றும் அங்கே காணக் கிடைக்கிறது.

அங்கே மத்திய அரசாங்கம் மாநிலங்களைச் சுரண்டி வாழும் சாதனமாகவும்; அவைகளை அடிமை கொண்டிருக்கும் எஜமானனாகவும் இருந்து வருகிறது. அதனால்தான் தென சுமத்ராவிலே கிளர்ச்சிக்காரர்கள் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டு; மத்திய மாகாணத்திற்கு எந்தவித வரியையும் அனுப்பாமல்; அப்படி வசூலிக்கப்பட்ட வரிகளைத் தங்கள் மாகாணத்திற்கே பயன்படுத்தி வருகிறார்கள்!

மேலும் பேலம்பாங் ரேடியோ அறிவித்த செய்தியொன்று தென்னகத்தின் பரிதாப நிலைமையை தென் சுமத்ராவோடு ஒப்பிடுவதாயும் அமைந்திருக்கிறது.

லெப்டினன்ட் கர்னல் அஹமத் ஹுசேன் என்னும் புரட்சித்தலைவரை தென் சுமத்ராவிலிருந்து வந்த அமைப்புக்குழு ஒன்று சந்தித்ததாம்.

அந்தத் தூதுக் குழுவின் தலைவர் தென் சுமத்ரா தனனுடைய பிரதேசத்தை வளமாக்கிக் கொள்ள எந்தவித வசதிகளும் செய்து தரப்படவில்லை யென்று முறையிட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்தோனேஷியாவில் கிளர்ச்சி உதயமாகக் காரணமாகயிருந்தவைகளை இப்போது எல்லோருமே புரிந்து கொள்ளலாம்.

மத்திய அரசாங்கத்தின் யதேச்சாதிகாரப் போக்கு!

தென் சுமத்திரா புறக்கணிக்கப்பட்டது! நிர்வாக ஊழல்! லஞ்சம்!

— இவையனைத்தும் தான் இந்தோனேஷியாவிலே ஒரு இராணுவப் புரட்சியைத் தோற்றுவித்து விட்டன!

நாட்டின் ஒரு பகுதியை வாழவிடக்கூடாது; வளரவிடக்கூடாது என்ற வஞ்சக நெஞ்சமும்; மாநில அரசாங்கங்களைக் கட்டுப்படுத்தி யதேச்சாதிகாரத்தைப் பெருக்க வேண்டும் என்கிற தீய நினைப்பும் இன்று இந்தோனேஷியாவிலே பெரும் கொந்தளிப்பைக் கிளப்பி விட்டிருக்கிறது!

எங்ஙனம் தென் சுமத்ரா மத்திய அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்டு வருகிறதோ; அது போலவே தென்னகமும் வடநாட்டு ஆதிபத்தியவாதிகளின் ஆதரவை இழந்து; வளம் கெட்டு; வாழ்ந்திடவேண்டிய நிலைமைதான் உருவாகியிருக்கிறது!

இதை நாம் மட்டுமல்ல; தென்னக மாந்தர் அனைவருமே உணர்ந்து வருகின்றனர்.

சென்னைத் தொழிலதிபர் அனந்தராம கிருஷ்ணன் திருச்சியிலே பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

"தொழில் துறையில் அபிவிருத்தியில் தென் இந்தியா மிகவும் புறக்கணிக்கப் பட்டிருக்கிறது. இங்கு ஆயிரக் கணக்கில் தொழிற்சாலைகளை அமைத்தாக வேண்டும். இதற்கு சென்னை அரசாங்கம டில்லியுடன் மிகவும் கடுமையாகப் போராடியாக வேண்டும்!"

அவர் திராவிடர் இயக்கத்தோடு எள்ளளவும் தொடர்பு கொண்டவரல்ல. அவரே கூறுகிறார், தென்னகம் புறக்கணிக்கப் பட்டிருக்கிறது, என்று!

தென் சுமத்ரா புறக்கணிக்கப்பட்டதால் இந்தோனேஷியாவிலே இராணுவப் புரட்சி தோன்றியது.

ஆனால் இங்கு தென் இந்தியா புறக்கணிக்கப்படுகிறது. ஆசைத் தவிர்த்திட இராணுவப் புரட்சி தேவையில்லை, இங்கு! அந்த இராணுவப்புரட்சி செய்கின்ற பணியினை வருகின்ற பொதுத் தேர்தலில் செய்து காட்ட முடியும் என்பதைத்தான் வஞ்சகர் கட்சியை வீழ்த்திட எண்ணும் பொதுமக்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்!

கரும்புபோல் இனித்து,

களிப்பால்

சுரும்புபோல் உங்களைச்

சுற்றவைக்கும்

பொங்கல் மலர்

தை முதல் நாள் என்று வரும் என எதிர்பார்த்து நிற்கிறோம் கரும்புடனும் கட்டி வெல்லத்துடனும் "முரசொலி" பொங்கல் மலரும் வருமல்லவா? எனவே தான் அந்நாளைப் பொன்னாளாகக் கருதுகிறோம்—என்று எழுதியிருந்தீர்கள் அல்லவா?

—அதை நனவாக்க வருகிறது—

'முரசொலி' பொங்கல் மலர்

அறிஞர் அண்ணாவின் பொன்னோவியத்துடன் துவங்கும்!

நாட்டுக்கு ஒரு சேதி!

நாதியற்று சிடக்கும் திராவிடரின் புது வாழ்வுக்காக வெல்லச் சொல் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் உவந்தளிக்கும் உரிமை முழக்கக் கட்டுரை

தாழை மரம்!

தமிழுக்கு ஓர் பெருமையாம் டாக்டர் மு. வரதராசனார் படைக்கும் அமிழ்தினும் இனிய கருத்து விருந்து!

உரிமையுணர்ச்சி!

காவிரி சூழ் நாடா! உன பூவிரிந்த சோலை இன்று புழுதி மேடானது ஏன்?—என்று எக்காலம் ஊதி, எல் போன்றோரையும் ஏறு நடைச் சங்கங்களாக்கும் அறிவுரைகளை பேராசிரியர் க. அன்பழகனார் தருகிறார்!

ஊழ்!

உலகமெல்லாம் கட்டியாண்டவன் இன்று விதியென்று மதி பிழக்கும் பேதமையை எடுத்துக் காட்டும் எழில்மிகு எழுத்தோவியம்; பலமைக்கு ஓர் எடுத்துக் காட்டு! புலவர் குழந்தை எழுதியிருக்கிறார்!

அந்த நாளும் வந்திடாதோ!

ஊனுக்கும் உணவிற்கும் குறைவின்றி; வானமட்டம் வளர்ந்த புகழோடு அன்று நாம் வாழ்ந்த காட்சியை நினைவுத்திரைக்குக் கொண்டுவரும் உங்கள் நெஞ்சை விட்டு நீங்காத சித்திரம்! அழகுத் தமிழ் எழுத்தோவியர் அரங்கண்ணல் தீட்டியது!

தங்கையும், மகனும்!

நகைச் சுவை பொங்க; இலக்கியச்சுவை கொழிக்க உங்களைக் கலைப்பூங்காவிற்குப் பாக்கு வைத்து அழைத்துச் செல்லும் சின்னஞ்சிறு நாடகம்! தித்திக்கும் தமிழ்நடைச்சாரராம் தில்லை வில்லாளன் தீட்டியது!

தியாக மாளிகை!

—மொகலாயர் வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு; கண்ணுக்குள் மணி போல் வளர்ந்த இரு காதலர் கதையினை உங்கள் எண்ணத்திலிருந்து விலகா வகையில் வண்ணமுடன் வரைகிறார் முன்னணி எழுத்தாளர் பி.சி. கணேசன்

நடிகையின் செல்வன்!

—இதயத்தை ஈர்க்கும் காந்தம் போல் நிகழ்ச்சிகளைக் கோத்து; உதயத்தைக் கண்டு மலரும் குமுதம்போல் உங்களை மகிழ வைக்கும் இனிய காவியம்! கலையழகுடன் கதைகள்தரும டைரக்டர் காசிலிங்கத்தின் படைப்பு!

★ முதல் பக்கத் தொடர்ச்சி

எனக்கு இல்லையா என்று வயிறு அழலாமா? அதனால் வடநாடு தென்னாடு எல்லாம் ஒன்றுதான்!... தென்னாட்டுக்கு ஐந்தாண்டுத்திட்டத்தாலும், காங்கிரஸ் சர்க்காராலும் நமக்கு எவ்வளவு நன்மை என்பதை உங்களுக்கெல்லாம் புரியும் வகையில் தியாகி கறுப்பனும், எனது எதிர்கால மனைவி கண்ணம்மாவும், குறவன் குறத்தி வேஷத்தில் வந்து இப்போது விளக்குவார்கள் என்று சொல்லி என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.........

[மக்கள், குறவன் குறத்தி நடனத்தை ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். பாடியவாறு குறவன் குறத்தி மாநாட்டு மேடையில் பிரவேசம்.]

கண்ணம்மா, குறத்தியாகவும், கறுப்பன் குறவனாகவும் வேடம் புனைந்திருக்கிறார்கள்.]

இருவரும்: (பாட்டு)

ஆஹோ!... ஹோ......
ஆயாலோக்குறி
ஆயாலோ!... ஆயாலோ!...
ஐந்தாண்டு திட்டக்
குறவன் குறத்தி
வந்தோமே ஆயாலோ!
ஆயாலோ!!

(வசனம்)

ஹே! சாமி, சாமி! அய்யாமாரே! அம்மாமாரே! தெண்டம்! தெண்டம்!... இந்த ஏழைக் குறவன் குறத்தியை ஆசீர்வதியுங்கள்!... ஆசீர்வதியுங்கள்!...

கண்ணம்மா: (பாட்டு)

அசோகன் கனிஷ்கன்
ஹர்ஷன் அவனுக்கு
முன்னே நம்ம அப்பன்
பாட்டன் மூவேந்தர்
ஆண்டுவந்த
இந்துஸ்தானம்—
தமிழ்நாடு......
இரண்டையுமே
இங்கிலீஷ்காரன்
பிடிச்சானே
மச்சான்! பிடிச்சானே!...
ஆயோலக்குறி
ஆயாலோ!......

கறுப்: (பாட்டு)

இளிச்சவாத்தனமாய்...
இந்த நாட்டை
இங்கிலீசு துரையிடம்
கொடுத்துவிட்டு...
புளிச்சேப்பம்
விட்டுக்கொண்டு......
போறவழி
பார்த்துக்கொண்டு......
சுழிச்சாங்க வாழ்நாளை...
பழிச்சாங்க
சுதந்திரத்தை!......
ஆயோலக்குறி
ஆயாலோ!... சிங்கி;
ஆயோலக்குறி
ஆயாலோ!......

கண்: (பாட்டு)

ஹியூம் என்ற
வெள்ளைக்காரன்
காங்கிரசை
ஆரம்பித்தான்!...
"ஊம்" என்று சில பேர்கள்
அதிலேயும்
சேர்ந்தார்கள்!...
உத்தியோக வேட்டைக்கு
உருவான கட்சியிலே.....
வேலையில்லாப் பட்டாளம்
வெகுவாகச் சேர்ந்த
தய்யா!......

கறு: (பாட்டு)

சலாம்! சலாம்!
இங்கிலீசுக்காரனுக்கு...
இங்குவந்த வெள்ளைக்கார
ராஜாவுக்கு சலாம்!
சலாம்!!
இப்படி...
சலாம் போட்டு குலாமாக
இருந்ததடி சிங்கி!...
சர்க்காரு தாசனாக
வாழ்ந்ததடி சிங்கி!...
காங்கிரசு, வாழ்ந்ததடி
சிங்கி!...

கண்: (பாட்டு)

பரங்கிகளின் பாதத்தை,
சிங்கா!
காங்கிரசு தாங்கியது
சிங்கா!...
மிதவாதக் கட்சியாக
சிங்கா!
மிதந்தது தான் காங்கிரசு
சிங்கா!

கறு: (பாட்டு)

திடீர்ப்புரட்சி தனைச் செய்
தார்...
திலகர் என்னும் பெரி
யார்!...
தீண்டாமை ஒழிப்பதற்
கும்...
அடிமைத்தளை அறுப்பதற்
கும்...
தியாகியாம் காந்தி வந்
தார்!...
புடம் போட்டார் காங்
கிரசை!...
விட மாட்டோம் இந்தி
யாவை என்று
வெள்ளையர்கள் வெகுண்
டெழுந்தார் சிங்கி!...

கண்: (பாட்டு)

வெள்ளைக்கார ஏஜெண்
டாம் காங்கிரசு, சிங்கா!
விடுதலை முகாமாய் மாறி
யது சிங்கா!...
கொள்ளைக்கார கட்சிதனை
ஒழிப்பதற்கு சிங்கா...
கொடி பிடித்தார் நாட்டு
மக்கள் கூட நின்று
சிங்கா!...

கறு: (பாட்டு)

தடி அடிகள்... துப்பாக்கி
வேட்டு... அடக்கு முறை
அதிர் வெடிகள்!... சிறைச்
சாலை!... இத்தனையும்
பெற்று... அறச்சாலை!......
வழுவாத காந்தி... அவர்
தொண்டர்... பெற்
றெடுத்த... சுதந்திரமே!...
சுதந்திரமே!... சுதந்தி
ரமே!... சுதந்திரமே...
இது!......

(மாநாட்டுத் தலைவர்கள் கரகோஷம்)...

கண்: (வசனம்)

அப்படிப்பட்ட சுதந்திர புருஷர்கள் இருந்த காங்

இரசில் இப்போது யார் இருக்கிறுர்கள் சிங்கா!...

கறு: அவசரப்படாதே, சிங்கி!.....நம்முடைய கல்யாணத்தை முடித்துக் கொண்டு, பிறகு அதைப் பற்றி ஆராய்வோம்!

(பாட்டு)

கல்யாணம் செஞ்சிக்கு
வோம் சிங்கி...
கனதன வான்களின் முன்
னிலையில்!...
கல்யாணம் செஞ்சிக்கு
வோம் சிங்கி!...

கண்: நான் மாட்டேண்டா
சிங்கா!...

கறு:
ஏண்டி மாட்டேங்கிறே...
எழிலெல்லாம் பெற்ற
வளே!...
ஏண்டி மாட்டேங்கிறே?...
ஆண்டி போல நான்
வாழ வேணுமா?...
தூண்டி மீனு போல நான்
துடிக்க வேணுமா?...
ஏண்டி மாட்டேங்கிறே'...
எழிலெல்லாம் பெற்ற
வளே!...

கண்:
கல்யாணம் பண்ணிகிட்டா
சிங்கா...
ஒட்டியாணம் போடுவாயா
சிங்கா!...

கறு:
இரும்பாலே
ஒட்டியாணம்...
செம்பாலே மூக்குத்தி
கரும்பே நான்
பூட்டுவேண்டி!...சிங்கி

கண்:
காதுக்குத் தோடு?...

கறு:
காதுக்குத் தோடு—
காலுக்கு ஜோடு!...
கழுத்துக்கு மஞ்சள்
கயிருேடு...
கல்யாணம்
பண்ணிக்கிறேன் சிங்கி!...

கண்: (மேடையிலுள்ள தலைவர்களைப் பார்த்து)
அய்யா நீங்கள்ளாம்
சாட்சி!...

கறு:
ஆமாம் வேறென்ன
அத்தாட்சி!...
மகாகனம் தலைவரின்
தலைமையிலே...
மதிப்புள்ள திறப்பாளர்
முன்னிலையில்...
மாலை மாற்றிக்
கொள்வோமே மயிலே!...
மாலை மாற்றிக்
கொள்வோமே மயிலே!

[இருவரும் இருமாலைகளைக் கொண்டு வந்து சமயோஜிதம் பிள்ளையிடம் கொடுத்து, அவர் கையாலேயே பெற்று, ஒருவருக்கொருவர் மாலை மாற்றிக் கொண்டு மகிழ்கிருர்கள்.]

ஆனை; சமயோஜிதம்பிள்ளை?... என்னது?

சம: சும்மா வேஷந்தானே; அதுக்கு தோஷமில்லை!...

பல: நிஜக்கல்யாணம் இல்லீங்க......

[கண்ணம்மா—கறுப்பன் இருவரும் பாட்டு...]

கண்: திட்டம் நிறைவேறியது மச்சான்!

கறு: இன்னும் பாக்கியிருக்குது சிங்கி!...

கண்: என்ன?

கறு: ஐந்தாண்டுத் திட்டம்
ஐந்தாண்டுத் திட்டம்!...
அய்யாமாரு புகழுகின்ற
அருமையான திட்டம்...
ஆருயிரங் கோடிக்கு
அரசியலார் தீட்டி
வைத்த திட்டம்...
ஐந்தாண்டுத் திட்டம்!...

கண்: என் அன்புள்ள
மச்சானே!
அடியாளின்
கேள்விக்குப்பதில்
சொல்ல ஆகுமா
உன்னாலே...
ஆயாலோக்குறி
ஆயாலோ!...
ஆகுமா உன்னாலே!...
ஆயாலோக்குறி
ஆயாலோ!......

கறு: கேளடி பெண்ணே நீ!...
கேள்விக்குமட்டுமல்ல;
கோரிக்கை யாடுகின்ற
உன் கண்ணுக்கும் பதில்
சொல்வேன்...

கண்: ஐந்தாண்டுத் திட்டத்தாலே யாருக்கு லாபம்? அய்யா இதைக் கேட்பதாலே ஆகாது கோபம்!

கறு: வடக்குச்சீமை வாழ்வதற்கும் தெற்குச் சீமை தேய்வதற்கும்............. போடப்பட்ட திட்டம்! ...இது போலியான திட்டம்!.................

ஆனை: ஆ!......
(பாட்டு)

கறு: அப்படின்னு, அண்ணுதுரை சொல்லுவாரு அய்யா!

ஆனை: ஆங்......அதான பாத்தேன்!

கறு: அவர் சொல்வதிலும் பொய்யே இல்லை..... உண்மைதானே அய்யா!..

கண்: கோடி கோடி கோடி
யாகத் திட்ட மெல்லாம்
வடக்கே!...
தெருக் கோடியிலே நிற்ப
தெல்லாம் தெற்குச்
சீமை வழக்கே!...

கறு: பக்ரா நங்கல் சிங்கி!...

கண்: வடக்கே தானே சிங்கா!

கறு: ஹீராகுட்டு சிங்கி!...

கண்: அதுவும் அங்கே சிங்கா!

கறு: அணைக்கட்டு, மனக்
கட்டு கட்டுவதெல்லாம்...
வடக்கே!...

கண்: அடிபட்டு உதைபட்டு
வதைபட்டுக் கிடப்பதெல்
லாம்—தெற்கே!......

✻ தொடர்ச்சி 8-ம் பக்கம்

அவாள் ஏடுகளுக்கு சவால்; அழகும் கவர்ச்சியும் மிக்க பேரேடு!

பொங்கல் மலர்!

மலேயாவில் மூன்று மாதம்!

தாயகம் விட்டு; வேறுலகத்தில் அடிமைவேலை செய்து பிழைக்கும் ஆயிரமாயிரம் திராவிடத் தோழர்களிடையே தென்னகத்தின் கலைத்தூதுவராகச் சென்று; விலையில்லாப் பணியாற்றித் திரும்பிய நடிப்பிசைப்புலவர் கே. ஆர். ராமசாமி மலேயா பற்றிய அனுபவங்களை எழுதுகிருர், படங்களுடன்.

நாடகத்தில் நாம்!

திராவிடத்தின் கெடுதலையே கருதியிருக்கும் கயவர்களைக் கருவறுக்கவந்த விடுதலைப் பட்டாளம் கலைத்துறையைக் கைப்பற்றி; அதன் மூலம் ஆற்றும் அறிவுலகப் பணியதனை அற்புதமாகச்சித்தரிக்கிருர் நடிகமணி டி. வி. நாராயணசாமி!

வலைப்புரு:

உள்ளம் புத்துணர்ச்சி பெறும் விதத்திலே உணர்ச்சிகளின் மோதுதலை வினயமுடன் விளக்குகிருர்: இனிமையும் எளிமையும் கலந்து எழிலோவியம் படைக்கிருர் க. அறிவழகன்!

நடந்ததும் நடக்காததும்!

மர்மமொன்றினைப் பின்னணியாக வைத்து: சம்பவங்களை அடுக்கிக்காட்டி: உங்களைத் திகைப்பிலாழ்த்தும் துப்பறியும் ஓவியம் அந்தமான் தருகிருர்!

இளவரசியின் காதல்!

உண்மைக் காதல்தனை ஒளி விளக்கால் காட்டும் அழகுச் சிறுகதை சந்திரி எழுதுகிருர்.

நான் கண்ட வ. உ. சி.

தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் விடுதலை வீரர் வ. உ. சிதம்பரனுர் பற்றித் தனது எண்ணங்களை வழங்குகிருர்!

நனவாக வேண்டிய கனவு:

நாளை மலர இருக்கும் திராவிடத்தை உங்கள் மனக் கண்முன் கொண்டுவரும் புதுமை ஓவியம். மாறன், எம். ஏ. தீட்டும் உங்கள் மனதைவிட்டு மறையாத இன உணர்ச்சிக் காவியம்!

உடுமலை நாராயணக்கவி, வாணிதாசன், கருணனந்தம், முடியரசன், புதுவை சிவப்பிரகாசம் ஆகிய கவிஞர்கள் தேனூறும் கவிதைச் சோலையிலே உங்களை உலவ விடுகிருர்கள்!

★ நாடகம்
★ நீண்ட கட்டுரை
★ சிறு கதை
★ கவிதை நடைச் சொல்லோவியம்

— இவையனைத்தையும் உங்கள் சிந்தை அணு ஒவ்வொன்றும் மகிழ்ந்திடும் வகையில் மு. க தீட்டுகிருர்!

★ வனப்பும் சிறப்பும் கொண்ட மூவர்ண ஓவியம்
★ உள்ளே உங்கள் இதயம் கவரும பல வண்ணப் படங்கள்! ஓவியர் கே. மாதவன் தீட்டியவை.
★ தலைவர்களின் பொன்மொழியங்கள்!
★ முரசொலி செல்லப்பன், ஓவியர் சது—பக்கத்திற்குப் பக்கம் அள்ளித் தெளித்திடும் சித்திரங்கள்!
★ மற்றும் உங்கள் கருத்துக்கும், கண்ணுக்கும் விருந்தளிக்கும் பல புதிய பகுதிகள் உண்டு!

இவை யனைத்தையும் கொண்டு, கரும்பினும் இனிதாய்: கட்டி வெல்லத்தினும் சுவை மிக்கதாய் முரசொலி பொங்கல் மலர் உங்களை நாடி வரப் போகிறது!

விலை இரண்டே ரூபாய்தான்!

★ முன பணம் அனுப்பாத விற்பனை யாளர்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் கண்டிப்பாய் மலர் அனுப்பப்பட மாட்டாது.

காதலுக்குக் கண்ணில்லை

• தொடர் நாடகம் •

தில்லை வில்லாளன் எம். ஏ.,

காட்சி-25. தொடர்ச்சி.

ஆள: மன்னரை யார் கொன்றிருக்க முடியும்? நான் பழி வாங்கப் போகிறேன் என்பது யாருக்குத் தெரியும்? ஆண்டவன் விளையாட்டு என்பதும் இதுதானோ—அப்படியே இருந்தாலும், அரசன் இன்று கொல்லும்—தெய்வம் நின்று கொல்லுமே!

பொ: ஆண்டவனை ஏன் இந்த நேரத்தில் அழைக்கிறீர்கள்—மன்னரை, நான் தான், சற்று நேரத்திற்கு முன்னால் கொன்றேன்.

ஆள: ஐயோ!

பொ: மன்னர் தூங்கிக்கொண்டிருந்தார்......என் மனதைக் கவர்ந்த மணவாளரே, நெருங்கி வாருங்கள்—அருகில் வந்து, அணைத்து, அச்சாரமாக ஒரு முத்தம் தாருங்கள் — கூற வேண்டியவை முடிந்த பிறகு மிச்ச முத்தங்களை மொத்தமாகப் பெற்றுக்கொள்கிறேன்—அச்சாரம் தேவையில்லை; என் மீது நம்பிக்கையில்லையா என்று கேட்கிறீர்களா? சரி. பிறகே எல்லாம் சேர்த்துக் கொடுத்து விடுங்கள்... கேளுங்கள், கண்ணாளா, கவனமாக. துயரம் தோய்ந்த வார்த்தைகளை தூவி விட்டு நீங்கள் என்னை விட்டுப் பிரிந்து சென்றீர்களல்லவா? அதன் பின்னால் நான் நெடு நேரம் சிலைபோல் இருந்தேன்—தங்களின் காதலை யிழந்து விட்டால், என் வாழ்வு, காலிழந்தமனிதனைப் போலவே மாறிவிடும் என்று எண்ணினேன். ஆகவே இன்றிரவு என்னை நானே கொன்றுகொள்ள நிச்சயதிருந்தேன். ஒரு மணி நேரத்திற்கு முன்னாலே விழித்திருந்தேன். முன்னெச்சரிக்கையுடன் என் வாழ்வின் முடிவு அத்தியாயத்தை எழுதிட தேடி எடுத்து, தலையணை யடியில் ஒளித்து வைத்திருந்த கட்டாரியை எடுத்தேன். கட்டாரியின் கூர்முனை, என் இதயத்தின் நேராக நின்றது. என் மனம் சுழன்று சுழன்று வந்தது. அதில் தங்களின் திருமுகம் தெரிந்தது. திரும்பினேன். என் அருகில், என் வாழ்வைப் பாழாக்கிய கிழ மன்னன் குறட்டைவிட்டு உறங்கிக் கொண்டிருந்தார் அவர் முகத்தில் வயதின் அறிகுறிகள் [illegible] மல்ல, பஞ்சமா பாதகங்கள் பல புரிந்ததின் விளைவாக ஏற்பட்ட வடுக்களும் தெரிந்தன. அவர் உறக்கத்திலும் ஏதோ கடுமொழி உதிர்ப்பதாகவே எனக்குப் பட்டது. அந்தக் கொடியவரின் முகம் ஒரு கணமும், ஒளிவிடும் வாளின் பளபளப்பும் ஒரு கணமும், என் மனதில் தோன்றி மறைந்தன. கொழுந்து விட்டெரியும் தீக்காற்றை போல் ஒரு எண்ணம் என் மனதில் தோன்றியது. தாங்கள் கூறினீர்களே, எனக்கும், உனக்கும் இடையிலே ஒரு தடைச் சுவர் இருக்கிறது என்று, அந்தத் தடைச்சுவர் இவரே எனக் கருதினேன். அந்த எண்ணம் மின்னல்போல் வந்தது—மின்னலுக்குப்பின் இடி—அதன்பின் மழை தானே—அதுபோல கட்டாரியின் பிடியும்—இரத்த மழையும் தொடர்ந்தன.

ஆள: ஓ கொடுமை, கொடுமை!

பொ: மன்னர் உருண்டார்—புரண்டார்—கட்டிலே, இரத்தக் குளமாயிற்று. நான் ஆடவில்லை; அசையவில்லை. தங்கள் காதல் தந்த துணிவு தான் இத்தனைக்கும்—அவர் முனகினார்—என் செவிகளில் அது புகவில்லை—சிறிது நேரத்தில் அந்த முனகலொலி நின்றுவிட்டது. இரத்தம் கட்டிலிலிருந்து வடியும் சத்தம் கேட்டது.

ஆள: போதும், போதும், நிறுத்து!

பொ: கதை முடிந்து விட்டது கண்ணாளா—நமது கணக்குப்படி முத்தங்கள் தந்தாக வேண்டும்—தாங்கள் ஒரு பெண்ணின் அன்பு மட்டும் கிடைத்து விட்டால், ஆண்கள் தேவர்களாகிவிடுவர் என்றுபீர்களே, அது போல ஒரு ஆணின் அன்பு. ஒரு பெண்ணை பெருந்தீயாக்கி விட்டது! அதற்காக இனி எதுவரினும் இருவரும் ஏற்போம்—வாருங்கள்— எனை வாரியணைத்துக் கொள்ளுங்கள்.

ஆள: அந்தோ!

பொ: தாங்கள் என்னிடம் பேச மாட்டீர்களா?

ஆள: என்னால் பேசமுடியவில்லையே!

பொ: கண்ணாளா, அந்த தடைச் சுவரை வெட்டி சாய்த்த புனித கட்டாரி கண்டு வணக்கம்செய்யலாம். அந்தப் பாவியின் உடலிலே அது ஒட்டிக்கிடக்கிறது. ஒழுகிய இரத்தம் அவ்வளவு அதிக மில்லை—ஆனால் என் கரங்களெல்லாம் இரத்தம் தோய்ந்து விட்டது. பிறகு நல்ல நீரிலே கழுவி கரங்களை சுத்தம் செய்து கொண்டேன். கரங்களை மட்டுமா, என் உயிரையே சுத்தம் செய்துகொண்டேன், அந்தக் கணத்தில். ஏன் இப்போது அந்த வீண் கதையைப் பற்றிப் பேச வேண்டும்? நம்மிடையே இருந்த தடைச் சுவர் இடிந்து விழுந்துவிட்டது. இனி இணைபிரியாது இனிது உலகில் வாழ்வோம். காலை வருகிறது கண்ணாளா—சடிதில் குதிரையேறி, அற நாட்டைக் கடக்க வேண்டும்.

[ஆளவந்தானை, தானே சென்று, பொன்மேனியாள், வலிய அணைத்தாள். அவனோ அவள் பிடியை உதறித் தள்ளி விட்டு நகர்ந்து போய் விட்டான்.]

ஆள: பொன்மேனியாளல்ல நீ, இரத்த மேனியாள்! இரத்தக் கவுல் அடிக்கிறது உன் மீது—மன்னன் உயிர் துடித்துச் சாக நேரமும் நிலைமையும் கூடிவந்து, நீ கொலை வாளைத் தூக்கிவிட்டாய். நீ மன்னனை—உன் மணவாளனைக் கொல்லவில்லை—காதலைக் கொன்றுவிட்டாய். காதல் இருந்த இடத்தில் இரத்தக் கறைபட்ட கட்டாரியை வைத்துவிட்டாய்!

[பொன்மேனியாளின் ஆச்சரியத்திற்கு அளவில்லை.]

பொ: கொன்றேன். யாருக்காக? உங்களுக்காக, என் காதலருக்காக. மனிதர்கள் அறிவதில்லை காதலுக்காக பெண்கள் எதையும் செய்யத் தயாராக உள்ளார்கள் என்ற உண்மையை—தங்களுக்காக என் உயிரையும் இழக்க இப்பொழுதும், எப்பொழுதும் சித்தமாக உள்ளேன்—கண்ணாளா, என் மீது அன்பு காட்டுங்கள்—கொலை செய்தேன்; உண்மை—உங்களுக்காகத்தான்—மறந்து விடாதீர்கள்!

ஆள: என்னைத் தொடாதே—உனக்கும் எனக்கும் இடையிலே, இரத்த வாய்க்கால் ஓடுகிறது. அதைக் கடக்க முடியாது. மன்னனைக் கொன்ற பொழுதே, காதலைக் கொன்று விட்டாய் என்றே கருதுகிறேன். இனி நாம் இணைந்திட வழியில்லை.

பொ: காதலைக் கொல்லவில்லை கண்ணாளா — தாங்கள் சொல்லவில்லையா, நம் இருவரையும் பிரிக்கும் தடை இருக்கிறது என்று, ஆம், அந்தத் தடை, இதோ, அந்த அறையில் தலை கீழாக, இரத்தம் வழிய வழிய இனி என்றைக்குமே நம்மைப் பிரிக்க முடியாதபடி விழுந்து கிடக்கிறது.

ஆள: நீ தவறாக புரிந்து கொண்டாய்—தடை, மன்னனல்ல—கொடுமை; புலிவலன் செய்த கொடுமை—அந்தக் கொடுமைக்குக் கோபுரம் வைத்தது போல கொலை செய்துவிட்டாய்—கொலை தான் நம்மைப் பிரித்த தடை; அதனை நீயும் செய்து விட்டாய்—உன் கரமோ, இரத்தம் தோய்ந்து கிடக்கிறது.

பொ: ஐயோ காதலா, நான் கொலையும், காதலுக்காகத் தான் செய்தேன்—என்னைத் தவிக்க விடாதீர்கள். கவனமாகக் கேளுங்கள்—குதிரைகள் தயாராகக் காத்திருக்கின்றன. இன்றிரவே நாம் பறந்து சென்று விடுவோம். நடந்ததை, ஒரு கெட்ட கன

கருணாநிதி சுற்றுப்பயணம்

ஜனவரி	11	குமாரபாளையம் (சேலம்)
,,	12	கோவை.
,,	13	காலை—புதுக்கோட்டை மாலை-தஞ்சை (கூட்டம்) இரவு-தஞ்சை (நாடகம்)
,,	14	சென்னை.
,,	16, 17	தேர்வுக் குழு சுற்றுப்பயணம்.
,,	19	வளவனூர்
,,	20	காலை—திருவாரூர் (ஆசிரியர் மாநாடு) மாலை—அம்மையப்பன்
,,	24	புதுவலசு.
,,	27	நாகை.

(கூட்டங்களில் தேர்தல் நிதி தரப்படும்.)

வாகவே கருதுவோம்–மறப்போம்–நமக்கு முன்னால் நம் எதிர்காலம் காத்து நிற்கிறது. நமது இனி வரும் வாழ்நாளில் சிரிப்புக்குத் தான் வேலை–இல்லை, இல்லை, சிரிப்புக்கு வேலையில்லாவிட்டாலும் அழுகைதான் துணையென்றால் இருவரும் சேர்ந்து அழுவோம். நான் ஏழைப் பெண்ணாகவும் இருந்திடுவேன்––என்னை நீங்கள் இன்னமும் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை.

ஆள : இப்பொழுதுதான் உன்னைச் சரியாகத் தெரிந்துகொண்டேன். போ, என் கண் பார்வையிலிருந்து விலகிப் போய்விடு.

பொ : (வெறுப்போடு) அந்தோ, இந்த மனிதரை, ஏன் அதிகமாகக் காதலிக்கிறேன்?

ஆள : நீ என்னைக் காதலிக்கவில்லை. காதலித்திருந்தால், அந்தக் காதல் உன் கரத்தைத் தடுத்திருக்கும்––கொலைகாரியாக்கி யிருக்காது!

பொ: நீங்களும் கொலைகாரர் ஆகாதீர்கள்–உங்கள் வார்த்தைகளே என்னைக் கொன்றுவிடும் போலிருக்கிறது!

ஆள: என்னை விட்டுப் போய்விடு. நாம் எப்படி காதல் மேசையின் இருபுறமும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி அமர முடியும்? குடி நீரில் நஞ்சைக் கலக்கி விட்டாய்—கொலை அதன் விரல்களை அதில் நனைத்தபடியிருக்கிறது. இதைவிட ஆயிரம் முறை நான் சாகத் தயார்.

பொ: நான் இப்போது செத்து செத்துப் பிழைக்கிறேன்.

ஆள: நீ சாவதற்காக அஞ்சாதே—பிழைப்பதற்காக பயப்படு—அவ்வளவு கொடியவள் நீ.

பொ: (மண்டியிட்டுக் கொண்டு) அப்படியானால், உங்கள் வாளால் என்னைக் கொன்று விடுங்கள். நான் ஏற்கனவே, இரத்தத்தை வடித்துவிட்டேன்––நீங்கள் இப்போது இரத்தத்தை வடியுங்கள்—சொர்க்கம் போனாலும் சரி; நரகம் போனாலும் சரி; இருவரும் கை கோர்த்து சேர்ந்தே போவோம். நீங்கள் உணராவிட்டாலும், உங்கள் வாள் முனையாவது, என் இதயத்தில் யார் சிலை அமைந்திருக்கிறது என்று அறிந்து கொள்ளும். இல்லாவிட்டால், அந்த வாளைக் காட்டுங்கள். அதனால், நானே என் உயிரைப் போக்கிக் கொள்கிறேன். (வாளை எடுக்கிறாள்.)

ஆள: வாளைத் தொடாதே—உன் கறைபட்ட கரத்தால் அதற்கு மாசு உண்டாக்காதே!

பொ: மண்டியிட்டுக் கெஞ்சும் உங்கள் மனோகரியைத் தூக்கிவிடக்கூட உங்கள் மனம் இடந்தரவில்லையா? ஐயோ கொடுமை!

ஆள : உன்னை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன் — என் பார்வையை விட்டுப் போய்விடு.

பொ : அழகாபுரியில் அன்று பார்த்தேனே–அப்பொழுதே பார்த்திராமலிருந்திருக்க வேண்டும்.

[இப்போது ஆளவந்தான் தள்ளி நடந்தான்.]

போகாதீர்கள், கண்ணாளா–– என் பேச்சைக் கேளுங்கள்– நான் மணமாகி இங்கு வந்தபோது என் மனதை நானே தேற்றிக்கொண்டு. குடும்ப விளக்காகவே இருந்திட உறுதி பூண்டேன். கொலை செய்ய எண்ணியதில்லை. கொடுமைக்காரன் கைபொம்மையாக ஆயுளைப் போக்கிடவும் தீர்மானித்தேன்–ஆனால், நீங்கள் அழகாபுரி விட்டு அறவாழிக்கு வந்தீர்கள்— என் மனதில் புயலடிக்க ஆரம்பித்தது. தங்கள் அன்பு மொழி, புயலை பெரும் புயலாக்கிவிட்டது. அது கூட கிடக்கட்டும்; தங்களின் அன்பு வழியும் விழிகளில், காதலின் கருத்தை, விளக்கத்தை எல்லாவற்றையும் கற்றுக் கொண்டேன். என் ஊமை உயிரை உயர்ந்த இசைவாணனாக மாற்றினீர்கள்–உங்கள் இளமையிலும் அழகிலும் என்னை மறந்தேன்—இழந்தேன்—அப்படியிருந்தும் என் காதலை நான் கூறவில்லை. நான் இப்போது மண்டியிட்டுக் கிடக்கிறேனே, அப்படி நீங்கள் மண்டியிட்டு, காதல் பிச்சைக் கேட்பீர்கள்.

[ஆளவந்தான் நகர்ந்த இடத்திற்கு மண்டியிட்டபடி போனாள்.]

தங்கள் பேச்சு, இசையாக இருந்தது என்செவிக்கு. தங்கள் வாக்குறுதியை நம்பினேன். உலகில் காதலனைக் கொண்டு கணவனைக் கொன்ற கதை கேட்பதுண்டு —ஆனால் நான் அப்படிச் செய்யவில்லை.

[பொன்மேனியாள் எழுந்து நின்றாள்.]

என்னை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை. தங்களுக்காகவே கொலை செய்தேன்– அந்தக் கொலையின் பயங்கரம் இப்போதுதான், என் குருதியை உறையச் செய்து விட்டது.

[பொன்மேனியாள், தன் இரு கரங்களையும் ஏந்தி அவனை அணைத்தாள்.]

30-ம் தேதி மாலை சேலம் பொதுக் கூட்டத்தில்—உண்டியல் வசூலை செயலாளர் இ. ஆர். கிருஷ்ணன் எண்ணுகிறார்.

தயாராகிவிட்டன!

கவின்மிகு கருத்துப் பெட்டகங்கள்!

மு. கருணாநிதி எழுதிய

வெள்ளிக்கிழமை

விலை ரூ. 2--0--0

உணர்ச்சிக் காவியம்! ஒப்பற்ற நவீனம்!

★

மாறன், எம்.ஏ., எழுதிய

வால்நட்சத்திரம்

விலை ரூ 1--0--0

சிந்தனைக் கருவூலங்கள்! சிறப்புமிகு முத்துக்கள்!

★

தயாராகிறது

கே. ஏ. மதியழகன் எழுதிய

"டாக்டரம்மா"

★

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் : : திருச்சி-2

காதலா, என்னோடு பேசமாட்டீர்களா? அன்பு காட்டமாட்டீர்களா? இது நாள் வரை, அன்பு என் வாழ்வில் கிடைக்காமல்தானே பட்டினி கிடந்தேன்—இன்னுமா, அன்புப் பட்டினியால் வாட்டுகிறீர்கள்?

ஆள : உன்னைப் பார்க்கவும் என் கண்கள் மறுக்கின்றன– கொலையைச் செய்து விட்டு அதற்கு விலையும் பேசுகிறாய்!

பொ : விலையா? விலை மதிப்பில்லா காதலுக்கு காணிக்கையாக அல்லவா கொலை செய்தேன்.

ஆள : குற்றம் உள்ள இடத்தில் காதல் இருக்காது!

பொ : காலை முதல் மாலை வரை உழைத்து, உழைத்த களைப்பு தீர குடித்து விட்டு, குடித்த போதையில் வீட்டிலே.

அவன் வரவிற்காகக் காத்திருக்கும் மனைவியை அடித்துத் துன்புறுத்துகிறான் கணவன்–அவளோ, அவன் கரம் வலிக்கப் போகிறது என்று கூறுகிறாள்–அப்படியல்லவா, பெண் ஆணைக் காதலிக்கிறாள்––காதலின் ஆழமும் அகலமும் தெரியாமல் பேசுகிறீர்கள்! என்னை வெறுக்காதீர்கள்––வெறுத்தால் நான் எங்கு போவேன்? நீங்கள் என்னை வெறுத்து விட்டால், வேறு யார் அன்பு காட்டுவார்கள் என்னிடம்? யாருக்காக, ஒரு கொலையைச் செய்யவும்தயங்கவில்லையோ, யாருக்காக என் உயிரை இழக்கவும் தயாரோ, அவர் என்னை வெறுத்தால், எனக்கு போக்கிடம் எது?

ஆள : வீண் கதை பேசி, வேதனையைப் பெருக்காதே– போய்விடு.

பொ : ஆண், பெண்ணைக் காதலித்தால், தன் வாழ்வில் ஒரு சிறு பகுதியைக்கூட அவன் அவளுக்காக இழப்பதில்லை. ஆனால் ஒரு பெண், ஆணைக் காதலித்தால், எல்லாவற்றையும் தருகிறாள்–அந்தக் காட்சியைத்தான் நான் பார்க்கிறேன்.

ஆள : போய்விடு–போய்விடு–– இறந்த மன்னனை எழுப்பி விட்டு என்னிடம் வந்து பேசு!

(தொடரும்.)

கடைசிப் பக்கம்

எழுத்தாணி

கே. கலிய பெருமாள் ;
அவிசா வெள்ள.

(?) ஓய். எழுத்தாணியாரே ? நீர் தயாரிக்கும் பொங்கல் மலர் எப்படி யிருக்கும் ?

முரசொலி மலர் வெளியிட்டு ஏமாற்றியதே கிடையாது, தோழரே ! நிச்சயம் சென்ற ஆண்டைவிட சிறப்பு மிக்க தாப்த்தானிருக்கும் இந்த ஆண்டு மலர் !

துரை. முருகேசன், சாரமடை.

(?) மன்னிக்க முடியாத மாபெரும் குற்றம் எது ?

நீர் எல்லாப் பத்திரிகைகளிலும் விடாமல் கேள்வி கேட்டுக் கொண்டிருப்பது தான் !

(?) மனிதன் நினைத்து, முடியாத செயல் உண்டா ?

உண்டு ; இப்போதெல்லாம் அவசரமாகவும் அவசியத்தோடும் எழுதுகிற கடிதங்களும், அனுப்புகிற பத்திரிகைகளும் குறிப்பிட்டவர்களுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் போய்ச் சேருமென்று நினைத்து அனுப்புகிறோமே; அது முடியாமற் போவதுண்டு !

கே. பி. நாதன். சின்னாளபள்ளி.

(?) வீடுகளில் சரஸ்வதி, லட்சுமி படங்கள் மாட்டலாமா ?

மாட்டலாம் ! சரஸ்வதி, லட்சுமி என்பவர்கள் தாயாராகவோ, தங்கையாகவோ, மனைவியாகவோ, அககாளாகவோ, உறவினராகவோ, தோழியராகவோ இருந்தால் அவர்கள் படங்களை மாட்டுவதில் தவறில்லை.

எம். தங்கவேலு, விழுப்புரம்

(?) ஆண்டவனுக்கும் ஆண்டு கொண்டிருப்பவனுக்கும் உள்ள வேறுபாடு எது ?

ஆண்டவன் பேசுவதில்லை. ஆண்டு கொண்டிருப் பவருக்கு பேசுவதைத்தவிர வேறு வேலையில்லை.

த. ஞானகிராமன் சென்னை. 14

(?) காங்கிரஸ் காரர்கள் மக்களிடம்எதைக்காட்டி வோட்டுக் கேட்பார்கள் ?

பல்லை !

சண்முக வடிவேல்.
திருப்பந்துருத்தி

(?) எழுத்தாணியே! நீர்ஆணியா? ஏணியா ? தோணியா ?

திமிர் கொண்டோர் தலைக்கு ஆணி ! சிலருக்கு ஏணி ! இது வரையில் கவிழாத தோணி !

கே. தமிழ்க்குமரி, தாடிக்கொம்பு

(?) கவர்னர் பிரகாசாவுக்கும். கவர்னர் ஜானுக்கும் உள்ள வித்தியாசம் என்ன ?

பிரகாசாவுக்கு பத்து லட்சத்தை ஜீரணிக்கிற உடம்பாவது இருந்தது !...

(?) அறிஞர் அண்ணு மேல் நாட்டில் பிறந்திருந்தால் ?

நம்மை யெல்லாம் அன்போடு தம்பி யென்றும் தங்கை யென்றும் அழைக்க ஒரு சகோதரர் இல்லாமற் போயிருப்பார் !

(?) அரியலூரில் ரயில் கவிழ்ந்ததைப் பற்றிக் காமராசர் என்ன கருதியிருப்பார் ?

" இப்படித்தானே காங்கிரஸ் சர்க்காரும் " என்று கவலைப்பட்டிருப்பார் !

கே. ஆனந்தன், மாயவரம்

(?) காங்கிரஸின் தேர்தல் பிரச்சாரம் துவங்கி விட்டதா ?

துவங்கி விட்டது !... சென்னையிலுள்ள சுவர்களைப் பார்த்தாலே தெரியுமே !

எம். டி. ஜேம்ஸ், சென்னை-23

(?) பண்டித நேரு நீதிபதியாகவும் காமராசர் வக்கீலாகவும் இருந்தால் குற்றவாளிகள் எப்படி இருப்பார்கள் ?

"அந்தோ எமது வழக்கை எடுத்துரைக்க ஆளில்லையே" என்று குற்றவாளிகள் ஏங்கிக்கொண்டிருப்பார்கள் !

பொங்கல் மலர்

தனிப்பிரதி வேண்டுவோர் கவனிக்க !

● *பொங்கல் மலர் தனிப்பிரதி தேவைப்படும் தோழர்கள் ரூ. 2—12—0 அனுப்பி இப்போதே பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம், சாதாரணத் தபால் மூலம் அனுப்புவதால் நிச்சயம் மலர் கிடைக்கும் என்ற உறுதிதர இயலாதாகையால் பதிவுத் தபால் மூலம் மட்டுமே அனுப்பப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.*

● *குறைவாக பணம் அனுப்பி யிருப்பவர்கள், தயவு செய்து மிகுதிப் தொகையையும் அனுப்பிவிட வேண்டுகிறோம்.*

—நிர்வாகி.

'முத்தாரம்'

முரசொலி பொங்கல் மலர் சிறப்புறத் தயாராவதால் இந்த (ஜனவரி) இதழ் முத்தாரம், வெளிவராது! அடுத்த பிப்ரவரி15-ல் வரவேண்டிய முத்தாரம்மார்ச் முதல்தேதியன்று புதுச் சிறப்புகள் பலவற்றுடன்; கலை விருந்தாக உங்கள் கரங்களில் திகழும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

முக்கிய அறிவிப்பு

★

பொங்கல் மலர் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதால் இந்த இதழ் மட்டும் எட்டு பக்க அளவில் வருகிறது. 11—1—57 இதழ் பொங்கல் மலராக வரும். முரசொலி அச்சகத் தோழர்களுக்கு பொங்கல் விடுமுறை காரணமாக 18—1—57 இதழ் வெளிவராது.

❊ *5-ம் பக்கத் தொடர்ச்சி*

ஆனை : நிறுத்துங்க... போதும் உங்கள் நடனம்'... சமயோஜிதம் பிள்ளை— இது என்ன அவமானகரமான சூழ்ச்சி !...

சம : எனக்கே தெரியவில்லை......என்னையே ஏமாற்றி விட்டாள் பாதகி !...

கண்ணம்மா | ஆயோலக்குறி
கறுப்பன் | ஆயோலக்குறி
ஆயாலோ !...... அய்யாமாரு ரெண்டு பேரும் ஏமாந்தாங்கோ ஆயாலோ !......"

கண் : ஏ, மச்சான் — அய்யாவுக்கு குறி சொல்லு மச்சான் !......

கறு : நீ சொல்லுடி குட்டி ; நீ சொல்லு !

கண் : குறி ! குறி ! குறி ! குறி ! (ஆனைமூஞ்சிப்பிள்ளையைக் காட்டி) அய்யா ஒரு தற்குறி !....

கறு : அவருக்குப் பதவியிலே குறி—

(சமயோஜிதத்தைக் காட்டி)

கண் : இவருக்குப் பணத்திலே குறி !...

கறு : இது ரெண்டுக்கும் இப்ப எலக்ஷனிலே குறி ! ..

கண் ; ஜனங்கள் பூசுவாங்க ; முகத்திலே கரி ! ...... (மக்கள் கரகோஷம்)

கறு : பொது மக்களே !...நான் உண்மையான காங்கிரஸ் தியாகிகளின் பரம்பரையிலே வந்தவன் ! சங்கரலிங்கத்தின் வழித்தோன்றல் நான் !...சொந்தக் கட்சி அநியாயம் செய்தால் அதைக் கண்டிப்பது குற்றமில்லை !...கண்டித்தேன் ! அதனால் கஷ்டப்பட்டேன் ! காந்தி, திலகர் போன்ற கர்ம வீரர்கள் விற்றிருந்த காங்கிரஸ் மாளிகையில், சமயோஜிதம், ஆனைமூஞ்சி, பலவேஷம் போன்ற பதவி வேட்டையாடும் வௌவால்கள் அடைந்து விட்டன. வௌவால்களை விரட்ட முயன்றேன் ! முடியவில்லை ! அதனால் நானே அந்த இருண்ட மண்டபத்தை விட்டு வெளியேறி விட்டேன் !.........கண்ணம்மா என்ற ஒளி விளக்கை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றேன். அவள் காட்டிய வழிதான்......என்னை திராவிட முன்னேற்றக் கழகமெனும் உண்மையான தேசிய, உண்மையான கம்யூனிச மாளிகைக்கு அழைத்து வந்தது ! உங்கள் அன்புக்குரிய தியாகி கறுப்பன், இப்போது ! ஒரு தி. மு. க!... தி. மு. க !...

ஒன்பதாண்டு இந்த அவல ஆட்சியிலே சிக்கினோம் ! ஒன்பதும் ஆண்டுகள் அல்ல ! ஒன்பது பயங்கர இரவுகள் !...நவராத்திரி... அந்த நவராத்திரி கொலு பொம்மைகள்தான் நமது மந்திரிகள் !...நவராத்திரி தொலையட்டும் !......இருள் விலகட்டும் !......ஆமாம்— இதோ—ஒளி உதயமாகி விட்டது !......உதய சூரியனின் ஒளிக் கதிர்களிலே நின்று திராவிடத்தின் விடுதலைக்குப் பாடுபடுவோம் !...

(என்றவாறு — 'உதய சூரியன்' சின்னம் வரையப்பட்டுள்ள ஒரு திரையை எடுத்து மக்களுக்குக் காட்டுகிறார்கள். மக்கள் கை தட்டி ஆரவாரம் செய்து மகிழ்கிறார்கள்...ஆனைமூஞ்சி, சமயோஜிதம், பலவேஷம் முதலியோர் ஓடுகிறார்கள்)

திரை விழுகிறது

● (முற்றும்) ●

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட்ரோடு சென்னை-6, தமிழ்நாடு.